**OS No.53/2020**

PW 1 – நிர்மலாவளன்அரசி

நாள் 13.08.2025

**வா.சா.1 அழைக்கப்பட்டு சத்தியப்பிரமாணம் செய்யப்பட்டு அவரை பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை செய்யப்படுகிறார்.**

எனக்கு வாதியான என் கணவர் கடந்த 27.09.2024 ம் தேதி தான் பவர் பத்திரம் எழுதிக்கொடுத்துள்ளார் என்றால் சரிதான். இந்த ஜெனரல் பவர் பத்திரத்திற்கு முன்பாகவே தாவா வழக்கு பற்றி எனக்குத் தெரியும். தாவா வழக்கை நான் தான் தாக்கல் செய்துள்ளேன். வழக்கு பற்றிய முழு விபரத்தையும் நான் தான் என் வழக்கறிஞரிடம் கூறினேன்.

எங்கள் இடத்தில் பிரதிவாதி கட்டியுள்ள கட்டுமானத்தை இடித்து எங்கள் வசம் எங்கள் இடத்தை தர வேண்டி இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளேன். கிழமேல் 16 அடி, தென்வடல் 6 ½ அடி இடத்தைக் கேட்டு வழக்கை போட்டுள்ளேன்.

என் வீட்டிற்கு கிழக்கே அருளாணந்தம் ஜெயசீலி வீடும், வடக்கே சிமெண்ட் ரோடும், மேற்கே தென்வடல் சந்து உள்ளது, தெற்கே மோட்ச அழங்காரம் என்ற சாமிகண்ணு இடம் உள்ளது. இவைகள் தான் நான் வழக்கு போட்டுள்ள தாவா சொத்திற்கான நான்குமால் ஆகும். என் வீட்டிற்கு வடக்கு பக்கம் உள்ள ஆர்.சி தெரு பகுதியில் தான் என் வீட்டிற்கு வாசல்படி உள்ளது.

இதை தவிர்த்து வேறு வாசல்படி எதுவும் எங்கள் வீட்டிற்கு இல்லை. என் வீடு கட்டி 100 வருடங்களுக்கு மேல் ஆகிறது. பிரதிவாதியின் முன்பாஸ்தியஸ்தர் மோட்ச அழங்காரம் என்ற சாமிகண்ணு

என்பவரின் வீடும் கட்டி 100 வருடங்களுக்கு மேலாகிறது. அவரிடம் இருந்து தான் 1 ம் பிரதிவாதி மேற்படி வீட்டை கிரயம் வாங்கியுள்ளார்.

**( பிரதிவாதிகள் தரப்பு வழக்கறிஞருக்கு வேண்டுகோளுக்கு இணங்க குறுக்கு விசாரணை தொடர்ச்சிக்காக வேறு ஒரு தேதிக்கு ஒத்திவைக்கப்படுகிறது )**

**–Sd–**

**Taken down by me in open court readover/interpreted to the witness in Tamil and acknowledged by him/her to be correct.**

**–Sd–**
**District Munsif,**
**Manamadurai.**